Date: 05.03.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS.3/2015

வா.சா.**1**

**பெயர்-** திருமதி.செல்வராணி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதிகள் ஒரு பாக பத்திரம் எழுதியுள்ளார்கள் அது செல்லாது என்பது தான் எங்களது வழக்கு. பதிவு அலுவலகத்தில் ஒரே பாக பத்திரத்தை பொறுத்து ஐந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எழுதினார்கள் என்றால் சரிதான். தற்போது ஐந்து பத்திரங்கள் உள்ளது. பதிவு அலுவலகத்தில் யார் கையெழுத்து போட்டு வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. பாகம் பிரிப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு என்னிடம் சொன்னார்கள் என்றால் அன்று இரவு தான் சொன்னார்கள். என்னிடம் முதல் நாள் இரவு 7 மணிக்கு போனில் சொன்னார்கள். நேரில் சொல்லவில்லை. புவனேஸ்வரிக்கும், அம்சாவிற்கும் நேரடியாக சொல்லவில்லை. என்னிடம் சொல்ல சொன்னார்கள். நான் போன் செய்து அவர்களுக்கு சொன்னேன். அதன் பிறகு மறுநாள் காலையில் மூன்று பேரும் வெவ்வேறு இடத்தில் இருந்தோம் என்றால் சரிதான். அன்று காலை நாங்கள் பிரதிவாதிகள் வீட்டிற்கு வந்தோம் என்றால் சரியல்ல. பத்திரம் எழுதிய அன்று பேருந்துகள் நிறுத்தம் நடந்தது. எனவே நாங்கள் அரசு பேருந்து மூலம் தான் வந்தோம். அன்று தனியார் பஸ் ஓடவில்லை. இதற்கு முன்பே தினகரன், பாலசுப்பிரமணியன், கருணாநிதி, விஜயராமன் செட்டியார் ஆகியோரை வைத்து பஞ்சாயத்து பேசினோம் என்றால் இல்லை. மேற்சொன்ன நான்கு பேர்களில் விஜயராமன் செட்டியார் மட்டும் எனக்கு தெரியும். மற்றவர்களை எனக்கு தெரியாது. அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. பத்திரம் எழுதுவதற்காக நாங்கள் வரும்போதே வாக்காளர் அடையாள அட்டை எடுத்து வந்தோம் என்றால் சரிதான். அன்று அம்சா புகைப்படம் எடுத்துவரவில்லை

என்றால் அனைத்தும் எடுத்து வந்தோம். அம்சாவிற்கு மரக்காணம் வந்து தான் பாஸ்போர்ட் புகைப்படம் எடுத்தார்கள் என்றால் இல்லை. அன்று மரக்காணத்திற்கு வரும்போது 12 .1/2 மணி ஆனது. நாங்கள் அரை மணி நேரத்திற்குள் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத்தை கையெழுத்து போட்டு கொடுத்தோம். ஒவ்வொரு பத்திரத்தையும் வாங்கும்போது படித்து பார்த்தோம். அப்போது 18 பக்கம் இருந்தது. பத்திரத்தை கிடைத்த பிறகு படித்து பார்த்தோம். பத்திரத்தில் எத்தனை கையெழுத்து போட்டோம் என்று அப்போது எண்ணி பார்க்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரத்தில் உள்ள ஒவ்வொரு கையெழுத்துகளும் என்னுடையது தான். ஒவ்வொரு பத்திரத்திலும் நான் 18 கையெழுத்துக்கள் போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் மூன்று பத்திரங்களிலும் உள்ள தலா 19 கையெழுத்துகள் என்னுடையது தான். ஒவ்வொரு பத்திரத்திலும் 19 கையெழுத்துக்கள் என 95 கையெழுத்துக்கள் போட எனக்கு 20 நிமிடம் ஆனது. அதே போல் அம்சா கையெழுத்து போட 20 நிமிடம் ஆனது. என்னிடம் வாங்கும் போது தான் அவர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். புவனேஸ்வரியும் என் எதிரில் தான் கையெழுத்து போட்டார். என் அம்மாவும் என் எதிரில் தான் அதில் கைநாட்டு போட்டார். பாபு, சங்கர் அதில் எப்போது கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. பத்திரம் எழுதிய போது என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. நாங்கள் கையெழுத்து போடும் போது படித்து பார்க்கவில்லையா என்றால் இல்லை. பதிவு அலுவலகத்திற்குள் சென்றேன். அங்கு எங்களிடம் பதிவேட்டில் கையெழுத்து மற்றும் கைரேகை வாங்கினார்கள். சார் பதிவாளர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரிப்பார் என்று சொன்னார்கள். கேட்டாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. கேட்டிருந்தால் நான் ஆமாம் என்று தான் சொல்லியிருப்பேன். அப்படி தான் என்னை சொல்ல சொன்னார்கள். சார் பதிவாளர் அலுவலகத்தில் என்ன நடந்தது என்று தற்போது வரை என் வழக்கறிஞரிடம் சொல்லவில்லை. என் அம்மாவை சார் பதிவாளர் விசாரித்தாரா என்று எனக்கு தெரியாது. நாங்கள் ஒருவர் ஒருவராக சென்று கையெழுத்து செய்து வந்தோம். நாங்கள் 6 பேரும்சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று வெளியில் வர சுமார் 1/2 மணி நேரம் ஆனது. அதன் பிறகு அங்கு ஒரு ஓட்டலுக்கு கூட்டிச்சென்று அங்கு போய் சாப்பிட்டோம். அன்று பேருந்து ஓடவில்லை என்று நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. மரக்காணத்தில் அன்று கடைகள் திறந்திருந்ததா என்று எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் அன்று பந்த் என்று தான் எழுதப்பட்டுள்ளது. நாங்கள் போகும் போது

பதிவு அலுவலகத்தில் கும்பல் இல்லை. எங்களுக்கு முன்பு ஒரு பத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. அன்று சார் பதிவாளர் அலுவலகத்திற்கு 10 மணிக்கு வரசொன்னார்கள். நான் பேருந்து இல்லாததால் 12 மணிக்கு தான் சென்றேன். பத்திர பதிவு 1 அல்லது 1.1/2 மணிக்கு முடிந்தது. இதை தவிர பந்தின் பாதிப்பு என்ன என்று என் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் இல்லை. அதன் பிறகு நான் மரக்காணத்திலிருந்து நான் பேருந்தில் தான் என் அம்மா வீட்டிற்கு சென்றேன். பாக பத்திரத்தில் எனக்கு கொடுத்த சொத்து என்ன என்பதை நான் தெரிந்துக்கொண்டேன். எங்கள் மூன்று பேருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்தை தற்போது எனது சகோதரர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள். எனக்கு பாகம் பிரித்துக்கொடுத்த பிறகும், அந்த சொத்தை அவர்கள் என் வசம் விடவில்லை. அன்றைய தேதியில் எத்தனை பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. பத்திர சமயத்தில் என்னுடைய விலாசம் என்ன என்றால் 105 கவிக்குயில் நகர், சாரம், பாண்டிச்சேரி என்ற விலாசத்தில் குடியிருந்தேன். வெங்கடேஸ்வரா நகரில் சிறிது காலம் குடியிருந்தேன். தற்போது கிருஷ்ணா நகரில் குடியிருக்கிறேன். நான் பாபு என்பவரிடம் ரூ.2,00,000/- கடன் வாங்கியிருந்தேன் என்றால் இல்லை. நான் பாபு என்பவருக்கு புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும், பாபுவிற்கும் வேறு வழக்கு உள்ளதா என்றால் மூன்று மாதத்திற்கு முன்பு தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது என்று என்னிடம் வந்து சொன்னார்கள். நான் வழக்குரையில் படித்து பார்த்து புரிந்துக்கொண்டு தான் கையெழுத்து போட்டுள்ளேன். வழக்கு போட்ட போது வழக்கு சொத்தின் மதிப்பு என்ன என்றால் ரூ.25,00,000/- இருக்கும். பத்திரத்தில் என்ன மதிப்பு எழுதினார்கள் என்று எனக்கு நினைவில்லை. பத்திரம் எழுதுவதற்கு முன்பு என்னிடம் பாக பத்திரம் எழுதபோவதாக சொல்லி தான் கூப்பிட்டார்கள். அந்த பத்திரத்திலும் பாக பத்திரம் என்று தான் இருந்தது. நானும் பாக பத்திரம் என தெரிந்து தான் கையெழுத்து போட்டேன். அவர்கள் வேறு வகையான பத்திரம் எழுதபோவதாக என்னிடம் சொல்லவில்லை. பாக பத்திரம் தான் எழுதபோவதாக என்னிடம் தெளிவாக சொன்னார்கள். நானும் பாகம் பிரித்து தருகிறார்கள் என்ற நம்பிக்கையில் தான் கையெழுத்து போட்டேன். பாக பத்திரத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்பது தான் எங்களது குற்றச்சாட்டு. இந்த பத்திரத்தை பொறுத்தவரையில் இதை தவிர வேறு குற்றச்சாட்டு உள்ளது. நான் எங்களது பிராதில் சமமான பாகம் வேண்டும் என்று தான் சொல்லியுள்ளேன். இந்த பாக

பத்திரம் செல்லாது என்று தான் சொல்கிறேன். இந்த பாக பத்திரம் செல்லாது அதை ரத்து செய்யவேண்டும் என்று கோர வேண்டும் என என்னுடைய வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எங்களது வழக்குரையில் பாக பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இல்லை என்றால் சரிதான். கேட்க வேண்டிய பரிகாரத்தை கேட்காததால் என் வழக்கே செல்லாது என்றால் சரியல்ல. பஞ்சாயத்து வைத்து முறைப்படி எங்களுக்கு சேரவேண்டியவைகளை பிரித்து கொடுத்து தான் பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல தவறு. என் அப்பா உழைப்பு குறைவு என்றும், எனது அண்ணன்கள் தான் அதிகமாக உழைத்து சொத்து வாங்கினார்கள் என்றால் தவறு. எனது வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.